DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No. 28/2024**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | சிவா | Caste: | |
| Father's Name: | முனியசாமி | Calling: | டிரைவர் |
| Village: | ஒன்டிவீரன் நகர், இராமேஸ்வரம் | Religion: | |
| Taluk: | | Age: | 25 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 08.09.2025

( 1, 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி இராமநாதபுரம் மாவட்ட சிறையிலிருந்து காணொலி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். )

**முதன்மை விசாரணை**

நான் இராமேஸ்வரத்தில் உள்ள ஒன்டிவீரன் நகரில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பு திருப்பூரில் டிரைவராக வேலை செய்து வந்தேன். நான் இந்து பட்டியல் இனத்தை சேர்ந்த அருந்ததியர் சமூகத்தை சேர்ந்தவன். எங்கள் பகுதியில் எங்கள் சமூகத்தை சேர்ந்த 120 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். நாங்கள் வசிக்கும் பகுதிக்கு தெற்கே நாடார் சமூகத்தை சேர்ந்த 3 வீடுகள் உள்ளன. ஆஜர் எதிரிகளையும், இராமநாதபுரம் மாவட்ட சிறையிலிருந்து காணொலிமூலம் ஆஜர்படுத்தப்பட்டுள்ள சங்கரையும் தெரியும். அவர்கள் மூவரும் இந்து நாடார் வகுப்பை சேர்ந்தவர்கள். சாட்சி தினேஷை தெரியும். சாட்சி தமிழரசி என் அம்மா. சாட்சி பிரியங்கா என் மனைவி. சாட்சிகள் வேலம்மாள், ரவிகணேஷ் ஆகியோர்களை தெரியும். வேலம்மாள் என் அத்தை, ரவிகணேஷ் என் மாமா. கடந்த 02.04.2024ம்

தேதி இரவு 9.30 மணியளவில் எங்க வீட்டுக்கு அருகே சக்திவேல் வீடு கட்டிக்கொண்டிருந்த வீட்டிற்கு முன்பாக தார் ரோட்டில் 1ம் எதிரி விஜயும், அழுக்கு மணி என்பவரும் மது அருந்திக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் கெட்ட வார்த்தைகளில் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் போய் ஏன் கெட்ட வார்த்தைகளில் பேசிக்கொண்டிருக்கிறீர்கள் என கேட்டேன். அதற்கு 1ம் எதிரி விஜய் நாங்கள் பேசிக்கொண்டிருந்தால் உனக்கு என்ன தேவுடியா மகனே, உன் வேலையை பார்த்துவிட்டு போடா என்று சொன்னார். வெளியில் வந்த என் அம்மா 1ம் எதிரி விஜயை பார்த்து ஏன் கெட்ட வார்த்தையில் திட்டுகிறாய் நீ போ என்று சொன்னார். நான் ரோட்டில் தானே பேசிக்கிட்டு இருக்கிறேன், நீங்கள் உங்கள் வேலையை பார்த்து விட்டு போங்கடா சக்கிலிய புண்டை மகன்களா என்று அசிங்கமாக பேசினார். அதனால் எனக்கும் 1ம் எதிரிக்கும் வாய் தகராறு ஏற்பட்டது. அப்போது 1ம் எதிரி விஜயும், அழுக்குமணியும் என்னை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். அப்போது என் மைத்துனர் தினேஷ் வந்து என்னை தூக்கிவிட்டு அவர்களை தடுக்க போனார். அவனையும் 1ம் எதிரி விஜயும், அழுக்குமணியும் அடித்தார்கள். ஊரில் உள்ள என் மாமா ரவிகணேஷ், வேலம்மாள், என் மனைவி பிரியங்கா , என் அம்மா தமிழரசி மற்றும் ஊரில் உள்ள 4,5 நபர்கள் வரவும் அழுக்கு மணி போய்விட்டார். 1ம் எதிரி விஜய் அவரது மச்சானான சங்கரை கத்திக் கூப்பிட்டார். ஓடிவந்த 2ம் எதிரி சங்கர் கத்தியை வைத்து முதலில் என் மூக்கிலும், பிறகு வலது தோள்பட்டையிலும், பிறகு முதுகிலும் வெட்டினார். எனக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. வெட்டியபிறகு 1ம் எதிரி விஜயும், 2ம் எதிரி சங்கரும் தெற்கு பக்கமாக சவுக்கு காட்டிற்குள் ஓடிவிட்டார்கள். என்னை ஆட்டோவில் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு

எனக்கு தையல் போட முடியாது என்று கூறி இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என் மைத்துனர் தினேஷ்க்கு ஏற்பட்ட காயம் ஊமைக்காயம் என்பதால் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை செய்து அனுப்பிவிட்டார்கள். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருக்கும்போது நான் சொல்ல சொல்ல எனது வாக்குமூலத்தை எழுதிக்கொண்டு போலிசார் என்னிடம் கையெழுத்து பெற்று சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1.** நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கத்தியால்தான் 2ம் எதிரி என்னை குத்தினார். அந்த கத்தி **அ.சா.பொ.1**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரிகளின் பெயர், விலாசம், அவர்கள் என்ன சமூகத்தை சேர்ந்தவர்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நாங்கள் குடியிருக்கும் பகுதிக்கும் எதிரிகள் குடியிருக்கும் பகுதிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீ தூரம் இருக்கும். வழக்கு முதல் சம்பவம் நடைபெற்று எவ்வளவு நேரம் கழித்து என் மச்சான் தினேஷ் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றால் 10 நிமிடங்களில் வந்தார். வழக்கு முதல் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் 1ம் எதிரி விஜய் மற்றும் அழுக்கு மணி, நான் தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்லும்போது இரவு 11.30 மணி இருக்கும். மருத்துவமனையில் சேர்ந்தபோது மணி எத்தனை இருக்கும் என்றால் 11.40 இருக்கும். நான் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் இருந்து

இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கிளம்பும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் இரவு சுமார் 12.15 இருக்கும். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் இராமேஸ்வரம் நகர் காவல்நிலையத்தை கடந்துதான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். நடந்த சம்பவத்தை இராமேஸ்வரம் நகர் காவல்நிலையத்தில் சொல்லிவிட்டுதான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் இல்லை, நேரடியாக மருத்துவமனைக்கு சென்றேன். காவல்நிலையத்தில் பணிபுரிகின்ற தலைமை காவலர் யார், சார்பு ஆய்வாளர் யார், ஆய்வாளர் யார் என்பது தெரியும் என்றால் சரிதான். என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்ற பாலகிருஷ்ணன் தலைமை காவலரா சார்பு ஆய்வாளரா என்றால் தெரியாது. இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையிலிருந்து இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் 108 ஆம்புலன்ஸ். ஆம்புலன்ஸில் வைத்துதான் பாலகிருஷ்ணன் என்ற போலிஸ் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார் என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் கொடுக்கும்போது மணி இரவு 12.45 இருக்கும். மெய்யம்புளி பஸ்ஸ்டாப் அருகில் வைத்து ஆம்புலன்ஸ் செல்லும்போது பாலகிருஷ்ணன் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார். மெய்யம்புளி பஸ்ஸ்டாப்பிற்கும் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 3–4 கி.மீ தூரம் இருக்கும். நான் இந்த வழக்கில் 2 முறை புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து டிஎஸ்பியிடம் புகார் வாக்குமூலம் கொடுக்கும்போது மணி எத்தனை இருக்கும் என்றால் அதிகாலை 4 மணி இருக்கும். 2 வது சம்பவம் நடக்கும்போது 1,2 எதிரிகள் தவிர வேறு யாரும்

இருந்தார்களா என்றால் 3ம் எதிரி நம்புவேல் விலக்கிவிட்டார். அவர் என்னை தாக்கவில்லை. அந்த சமயம் என் அம்மா, மனைவி, மாமா, அத்தை இருந்தார்கள். வழக்கு சம்பவத்தின்போது எனக்கு ஏற்பட்ட காயத்தால் எனக்கு மயக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். மயக்கம் தெளிந்து நான் பேசும் நிலைக்கு வருவதற்கு எவ்வளவு நாட்கள் ஆனது என்றால் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் வந்து ஊசி போட்டவுடன் மயக்கம் தெளிந்துவிட்டது. ஆம்புலன்ஸில் வைத்து போலிஸ் பாலகிருஷ்ணன் என்னிடம் வாக்குமூலம் பெறும்போது கையெழுத்து வாங்கினாரா என்றால் இல்லை, அவர் செல்போனில் என்னுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தார். என்னுடைய வாக்குமூலம் சரியாக பதிவாகவில்லை என்பதால் அவர் மருத்துவமனையில் சிகிச்சை செய்து பிறகு வாங்கிகொள்கிறோம் என்று சொன்னார். நான் பாலகிருஷ்ணன் எழுதிய வாக்குமூலத்தில்தான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து போட்டேனா என்றால் ஆமாம். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்களா என்றால் அளித்தார்கள். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலேயே எதிரிகள் கத்தியை போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமும் நேரமும் இருட்டான நேரம், இடம் என்றால் சரிதான். எதிரிகள் வைத்திருந்ததாக சொல்லப்படும் கத்தி இரும்பால் ஆனதா இல்லை, தகரத்தால் ஆனதா அல்லது சில்வரால் ஆனதா என்பது இருட்டான நேரம் , இடம் என்பதால் சரியாக தெரியாது என்றால் சரிதான். கத்தியின் நீளம், அகலம், கத்தியின் பிடி இரும்பால் ஆனதா தகரத்தால் ஆனதா, பிளாஸ்டிக்கால் ஆனதா என்பது எனக்கு தெரியாது என்றால்

சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்ற நேரத்தில் நான் கருப்பு வேஷ்டியும், வெள்ளை பனியனும் போட்டிருந்தேன். நான் முன்டா பனியன்தான் அணிந்திருந்தேன். நான் அணிந்திருந்த பனியன் மற்றும் கைலியில் இரத்தம் பட்டது என்றால் சரிதான். நான் அணிந்திருந்த மேலாடை கத்தியால் கிழிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலத்தில் பாலகிருஷ்ணன் என்ன எழுதியிருந்தார் என்ற விவரம் என்பது எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. படித்துக் காண்பித்தார்கள். எந்த இடத்தில் வைத்து பாலகிருஷ்ணன் எனக்கு புகார் வாக்குமூலத்தை படித்துக் காண்பித்தார் என்றால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் மருத்துவர் என்னை விசாரிக்கும்போது என்னை யார் தாக்கினார்கள், எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள், எந்த இடத்தில் வைத்து தாக்கினார்கள் என்ற விவரத்தை சொன்னேனா என்றால் இல்லை. இராமேஸ்வரம் மருத்துவமனை மருத்துவரிடமும் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடைபெற்ற நேரத்தில் வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் எவ்வளவு பேர் இருந்திருப்பார்கள் என்றால் 5 பேர் . அவர்களுக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் கொடுத்தபிறகு என்னை யாரும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு முன்பு எனக்கும் 2ம் எதிரிக்கும் தொழில் ரீதியாக முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும் எனக்கும் முன் விரோதம் இருந்தது என்றும் அதை மனதில் வைத்துக்கொண்டு இருட்டான நேரத்தில் இடத்தில் அடையாளம் தெரியாத நபர்கள் ஏற்படுத்திய காயத்தை வைத்துக்கொண்டு பின்னிட்டு போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க 2ம் எதிரியை

பழிவாங்க வேண்டும் என்றும் எண்ணத்தோடு உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**1,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை**

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 28/2024**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | தமிழரசி | Caste: | |
| Husband Name: | முனியசாமி | Calling: | துப்புரவு பணியாளர், இராமேஸ்வரம் நகராட்சி |
| Village: | ஒன்டிவீரன் நகர், இராமேஸ்வரம் | Religion: | |
| Taluk: | | Age: | 38 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 08.09.2025

( 1, 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி இராமநாதபுரம் மாவட்ட சிறையிலிருந்து காணொலி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். )

**முதன்மை விசாரணை**

நான் இராமேஸ்வரத்தில் உள்ள ஒன்டிவீரன் நகரில் வசித்து வருகிறேன். நான் இராமேஸ்வரம் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணி செய்து வருகிறேன். நான் இந்து பட்டியல் இனத்தை சேர்ந்த அருந்ததியர் சமூகத்தை சேர்ந்தவள். அ.சா.1 சிவா என் மகன். சாட்சி தினேஷ் என் தம்பி மகன். சாட்சி பிரியங்கா என் மருமகள். சாட்சிகள் வேலம்மாள் என் தம்பி மனைவி, ரவிகணேஷ் என் தம்பி. எதிரிகளை தெரியும். அவர்கள் எந்த சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பது எனக்கு தெரியாது. கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒருநாள் இரவு 9.00 மணியளவில் நாங்கள் குடியிருக்கும் தெருவில் சக்திவேல் வீட்டு முன்பாக 1ம் எதிரி விஜய் குடித்துவிட்டு கெட்ட வார்த்தையால் பேசியுள்ளான். எனது மகன் போய் ஏன் இப்படி பேசுகிறீர் என்று கேட்டான். 1ம் எதிரி விஜய் மண்டைக்கரமாக பேசி என் மகனை அடித்தான். என் மகனும் அவனோடு சண்டை

போட்டான். அங்கிருந்தவர்களும் நானும் விலக்கிவிட்டோம். அப்போது விஜய் சங்கர் கத்தியை வைத்து என் மகனின் மூக்கில் வெட்டி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார், பிறகு முதுகில் 2 குத்து குத்தி இரத்தக்காயத்தை ஏற்படுத்தினார். குத்தியர்வகள் ஓடிவிட்டார்கள். காயம்பட்ட எனது மகனை நான், எனது மருமகள், தினேஷ் ஆகியோர்கள் இராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு கூட்டி சென்றோம். மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு எனது மகனை 108 ஆம்புலன்ஸ் மூலமாக அழைத்து சென்று சிகிச்சைக்கு சேர்த்தோம். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். எனக்கு தமிழ், ஆங்கில மாதம், தேதி , வருடம் தெரியாது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நானும் எதிரிகளின் தாய் தந்தையாரும் உடன் இருந்தோம் என்று சொன்னால் சரிதான். எனக்கு சம்பவத்தை பார்த்தவுடன் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலேயே மயக்கம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. மயக்கம் தெளிந்து நான் பேசும் நிலைக்கு வருவதற்கு 2,3 நாட்கள் ஆகியிருக்குமா என்று சொன்னால் ஆகியிருக்கும். இராமேஸ்வரம் மருத்துவமனைக்கு செல்லும்போது இராமேஸ்வரம் நகர் காவல்நிலையத்தை கடந்துதான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்த உடனே போலிசாருக்கு தகவல் சொல்லி போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் போலிசார் நடந்த விவரங்களை கேட்டு எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். போலிசார் எழுதிக்கொண்டதில் நானும் என் மகனும்

கையெழுத்து போட்டோம் என்றால் சரிதான். இருட்டான நேரம், இடம் என்பதால் யார் யாரை, எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என சரியாக என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக யார் எங்கு வைத்து போலிசாரிடம் புகார் கொடுத்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தது சம்பந்தமாக வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் முதல்விசாரணையில் எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

**1,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)